**நெல் சந்தைப்படுத்தல் சபை - 2020**

------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அறிக்கைகள் தாமதமடைந்தமை காரணமாக சபை தொடர்பான கொடுக்கல் வாங்கல் அறிக்கை 2022 நவம்பர் 22 ஆம் திகதி மும்மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாமல் இருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

சபையின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இற்றைப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்புக்கள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால் அம்மாற்றங்கள் இ.க.நி. 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றமொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 951,765,591 கிரயமான சபையின் சொத்துக்களுக்கான இற்றைப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில், நெல் சந்தைப்படுத்தல் சபையின் சில சொத்துக்கள் தேய்மானமிடப்பட்டு முடிவடைந்துள்ளன. அடைந்துள்ளன. அவை இன்னும் பயன்பாட்டில் உள்ளது என்பதுடன் மறுமதிப்பீடு செய்யப்படவில்லை. அதன்படி, எதிர்காலத்தில் அந்த நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் மீளாய்வாண்டின் அரசாங்க மூலதன மானியங்களிலிருந்து வாங்கப்பட்ட சொத்துகளுக்கான தேய்மானம் ரூபா 72,239,655 ஆக இருந்ததுடன் அதை மிகைத்து ரூபா 149,431,804 ஒத்திவைக்கப்பட்ட வருமானமாகக் கணக்கிடப்பட்ட காரணத்தால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 77,192,149 அதிகமாகவும் மற்றும் நடைறையல்லாப் பொறுப்புக்கள் அதே அளவினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆம் வருட கணக்குகள் தயாரிக்கும்போது திருத்தம் செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் இறுதிப் இருப்பு பெறுமதி ரூபா 99,391,958 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் ஆரம்பப் இருப்பு பெறுமதி ரூபா 274,658,564 ஆகவும் 2020 திசெம்பர் 31 இல் மீதமுள்ள இருப்பு பெறுமதி ரூபா 577,498,157 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் இருப்பு ரூபா 174,666,606 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் வருட கணக்குகள் தயாரிக்கும்போது திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | விற்பனை செலவைக் கணக்கிடுவதில் சேர்க்கப்பட வேண்டிய நேரடி செலவுகள ரூபா 35,029,837 ஆனது நிர்வாகச் செலவுகளில் சேர்க்கப்படடிரந்தன. | 2021 ஆம் வருடத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளின் தகவல்கள் உண்மை நிலையை வெளிப்படுத்தும் வகையில் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 இல் வாங்கப்பட்ட இருப்புக் கட்டுப்பாட்டு அமைப்பிற்காக மீளாய்வாண்டிற்கான தேய்மானம் ரூபா 1,000,000 கணக்கிடப்படாததன் காரணமாக, ஆண்டிற்கான தேய்மானம் மற்றும் தேய்மான ஒதுக்கீடுகள் ரூபா1,000,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | திரட்டப்பட்ட தேய்மானத் தொகை 2021 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் சரி செய்யப்படும். | தேய்மானம் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி தொகையான ரூபா 3,755,587 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருட கணக்குகளில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய வட்டி வருமானம் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் 8 நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படடும் வங்கியில் செலவு வைக்கப்படாத வைப்புத்தொகைகளின் பெறுமதி ரூபா 54,707,458 ஆக இருந்ததுடன் அவ்வைப்புக்கள் 2011 முதல் 2020 வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. அந்த செலவு வைக்கப்படாத வைப்புத்தொகைகளை கண்டறிவதற்கு மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுக்கப்படாததுடன் தாமதக்காலம் 9 வருடங்கள் முதல் 1 மாதம் வரையாக இருந்தது. | 2020 இற்கு முன்னர் வங்கியில் செலவு வைக்கப்படாத வைப்புத்தொகைகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (எ) | சபையின் மக்கள் வங்கியின் 014-1-002-7-0002717 ஆம் நடைமுறை கணக்கு இலக்கத்தில் 2020 திசெம்பர் 31 இல் காசேட்டின்படி ரூபா 69,449,720 ஆன மேலதிகப்பற்று காணப்பட்டதுடன் வங்கியின் மீதி உறுதிப்படுத்தல்களின்படி, மேலதிகப்பற்று இல்லை என மீதி உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட வங்கி இணக்கத்தின்படி வைப்புச் செய்யப்பட்ட ஆனால் செலவு வைக்கப்படாத மீதியின் பெறுமதி ரூபா 2,978,447,880 மற்றும் வழங்கப்பட்ட ஆனால் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 3,047,897,600 ஆகும். மேற்படி நிலுவைகள் அங்கீகரிக்கப்பட்டு, காசேட்டில் உள்ள வங்கி மேலதிகப்பற்று தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்த மீதி மாறாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டது. | இக்கணக்கு மீதி இனங்காணப்பட்டு காசேட்டில் மேலதிகப்பற்று தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகப்பற்று இனங்காணப்பட்டு கணக்கு திருத்தப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வீதி இருப்புக்களாக ரூபா 2,234,953 காட்டப்பட்டிருந்ததடன் இந்த இருப்பு மாறுபடாது 2018 ஆம் ஆண்டு முதல் இப்போது வரை காணப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நெல் மோல் உரிமையாளர்களிடம் இருந்து பெற வேண்டியதாக காணப்பட்ட தொகையை தீர்ப்பதற்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. | இனங்காணப்பட்டு கணக்கு திருத்தப்பட வேண்டும்.. |

### 1.5.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| | விடயம் | நிதிக்கூற்றுக்கயின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | வேறுபாடு (ரூபா) | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (i) | கடன் பட்டோர் (உணவு ஆணையாளர் திணைக்களம்) | 436,543,583 | மீதி இல்லை | 436,543,583 | மீதிகளுக்கிடையிலான வேறுபாடுகளை உறுதிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கம் செய்யப்பட்டு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | கடன் பட்டோர் (சதொச) | 1,392,190,102 | 998,796,552 | 393,393,550 | மீதிகளுக்கிடையிலான வேறுபாடுகளை உறுதிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் பட்டோர் தரப்பிலிருந்தும் மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டு இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளில் சரியான பெறுமதிகளை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | கடன் பட்டோர் (லங்கா சதொச) | 809,417,974 | 706,324,615 | 103,093,359 | அம்மீதிகளுக்கிடையிலான வேறுபாடுகளை உறுதிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.. | மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டு இணக்கம் செய்யப்பட்டு உரிய தீரத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | கடன் பட்டோர் (சதொச) | 1,202,897 | 92,189,699 | 90,986,802 | அம்மீதிகளுக்கிடையிலான வேறுபாடுகளை உறுதிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |

### 1.5.4 நிச்சயமற்ற கணக்குகள்

| | விடயம் | பெறுமதி (ரூபா) | நிச்சயமற்றதாக இருந்த காலம் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (i) | நெல் இருப்பு குறைவடைவு | 3,031,256,050 | 4 ஆண்டுகளுக்கு அதிகமாக | தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றத. | விரைவில் இனங்காணப் பட்டு கணக்குகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிச்சயமற்ற கொள்வனவு | 18,574,188 | | | |
| (iii) | இனங் காணப்படாத நெல் கொள்வனவு | 70,818,163 | 9 ஆண்டுகளுக்கு அதிகமாக | | |

### 1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்கள் சந்தை விலை மற்றும் அதன் கிரயத்தை விட குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இதனால், அடுத்த பருவத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்கும், நெல்லை விற்பனை செய்வதன் மூலம் ஏற்படும் நட்டங்களை தீர்ப்பனவு செய்வதற்கும் தேவையான நிதிகளை திரட்டுவதற்காக வருடாந்தம் பொது திறைசேரி மற்றும் அரச வங்கிகளிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நெல் கொள்வனவிற்கு மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்கு 02 அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களில், 2020 திசெம்பர் 31 வரை திரண்ட செலுத்த வேண்டிய | கருத்துரை வழங்கப்படவில்லை. | சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொகை ரூபா 22,652.79 மில்லியன் மற்றும் அதற்காக செலுத்த வேண்டிய திரண்ட வட்டித் தொகை ரூபா 28.67 மில்லியன் ஆக காணப்பட்டன. | |
| (ஆ) | கடந்த மூன்று ஆண்டுகளின் நிகர சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் நிகர சொத்துக்களின் பெறுமதி முறையே 2017 ஆம் ஆண்டில் ரூபா 12,548.69 மில்லியன் ஆன எதிர்மறை மதிப்பு, 2018 ஆம் ஆண்டில் ரூபா 13,266.65 மில்லியனாகவும், 2019 ஆம் ஆண்டில் ரூபா 14,176.43 மில்லியன் எதிர்மறை மதிப்பாக மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 14,656,26 மில்லியன் எதிர்மறை மதிப்பாக உயர்வடைந்திருந்தது. இது சபையின் தொடர்ந்தியங்கும் தன்மையை மோசமாகப் பாதித்துள்ளதுடன், இதன் காரணமாக அரசாங்கத்தின் நிதியுதவியின்றி நிறுவனம் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கான நிதி வலிமையைக் கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்துரை -மேற்படி- வழங்கப்படவில்லை. |

### 1.5.6 கணக்காயிவிற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | **கடன்பட்டோர் மீதி** | | | | |
| (i) | அமைச்சு நெல் விற்பனை | 32,688,410 | உறுதிப்படுத்தல் ஆவணம் | கடன்பட்டோர் நிலுவைகளில் இருக்கும் பெறுமதிகளை மீட்டெடுப்பதற்காக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் தடயவியல் கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு அமைச்சின் செயலாளரின் தலைமையில் உரிய நிறுவனங்களின் தலைவர்களை ஒன்று திரட்டுவதற்கு எதிர்பார்த்து 2023.05.22 அன்று கடிதம் | பெறுமதிகளை உறுதிப்படுத்து வதற்கு தேவையான சான்றுகள் பெறப்பட வேண்டும். |
| (ii) | அமைச்சிடமிருந்து பெற வேண்டியவை | 264,154,465 | | | |
| (iii) | நோர்த் சீ (North – Sea) | 1,000,000 | | | |
| (iv) | பனை அபிவிருத்தி அதிகாரசபை | 700,000 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | அலை உரிமையாளரிடமிருந்து பெற வேண்டியவை | 61,699,951 | | அனுப்பப்பட்டுள்ளது. | |
| (vi) | பெற வேண்டியவை (அம்பாறை மாவட்ட செயலகம்) | 2,458,086 | விரிவான அட்டவணை | | |
| (vii) | பெற வேண்டியவை (அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்) | 18,351,743 | | | |
| (viii) | அரிசி ஆலைகள் ஏற்றுமதி | 204,960,877 | | | |
| (ix) | அரிசி ஆலைகள் (கடன் அடிப்படையிலான விற்பனை) | 44,399,804 | விரிவான அட்டவணை | உரிய நிறுவனங்களின் தலைவர்களை ஒன்று திரட்டுவதற்கு எதிர்பார்த்து 2023.05.22 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கணக்கு விடயங்களின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்துப்பூர்வ சான்றுகள் பராமரிக்கப்பட எடுக்கப்பட வேண்டும் |
| (x) | அரிசி ஆலைகள் (CWE & WF – 2016) | 8,027,716 | | | |
| (xi) | கொள்வனவு கட்டுப்பாட்டுக் கணக்கு | 49,743,530 | | | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,706,737,098 கடன்பட்டோர் மீதியில் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,931,134,627 மற்றும் 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 737,628,510 ஆன மீதிகளை உள்ளடங்கியிருந்தது. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களை வரவழைத்து அவர்களுடன் சந்திப்பை தயார் செய்யுமாறு கோரி கடிதம் அனுப்பியுள்ளேன், இது தொடர்பான | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பதில்களுக்காக எதிர்பார்த்து இருக்கிறோம். | |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 7,115,835,727 கடன்கொடுத்தோர் மீதியில் 04 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 6,723,668,939, 03 ஆண்டுகள் மற்றும் 04 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 278,938,959, 01 ஆண்டு மற்றும் 03 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 64,973,673 மற்றும் 01 ஆண்டிற்குட்பட்ட ரூபா 48,254,157 ஆன மீதிகள் காணப்பட்டன. இம்மீதிகளில் விறைசேரிக்குச் செலுத்த வேண்டியவை ரூபா 6,684,554,538 ஆக இருந்ததடன் அம்மீதி 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடன்கொடுத்தோர் மீதியில் காணப்படுகின்ற பெறுமதிகளுக்கான மீதிகளை தீர்ப்பதந்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதடன் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு எவ்வித ஏற்பாடுகளும் இல்லாத காரணத்தினால் இதுவரை திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுததுவதற்கு முடியவில்லை. | பழைய மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளாக தீர்க்கப்படாது தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்ற முற்பண மீதி ரூபா 12,131,961 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் உள்ள ரூபா 708,334 ஒரு வருடத்திற்கும் மேற்பட்டதாகவும், ரூபா 469,734 ஆன மீதி இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்டதாகவும், ரூபா 10,817,161 ஆன மீதி மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகவும் ஆன பழைய மீதிகளாக காணப்பட்டன. | தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முற்பணம் விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவையின் | 04 வங்கிக் கணக்குகள் தொடர்பாக, 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட்டு 2 | மீதிகள் தொடர்பாக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டதா என்பது தொடர்பில் | மீதிகள் கண்டறியப்பட்டு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| நி.பி 396 | ஆண்டுகளில் இருந்து 6 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு மேற்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 4,771,475 மதிப்புள்ள 37 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கண்டறியப்பட்டு விரைவில் உங்களுக்கு பதில் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,248,739,079 நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 741,663,275 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 507,075,804 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் ரூபா 36,796,638 ஆல் குறைவடைந்தமை, நிதிச் செலவினம் ரூபா 717,225,824 ஆல் அதிகரித்தமை என்பன குறித்த வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நெல் சந்தைப்படுத்தல் சபையின் முதன்மை நோக்கம், நெல் விவசாயிகளிடமிருந்து பயிர்களை உத்தரவாத விலையில் கொள்முதல் செய்வதன் மூலம் விவசாயிகளின் வறுமையைக் குறைப்பதும், பாதுகாப்பான இருப்பை வைத்து நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதும் ஆகும். 327,285 மெ.தொ கொள்ளளவு கொண்ட 356 களஞ்சியங்கள் இருந்தாலும், 2023 யூலை 26 வரை , சபைக்குரிய 7 மாகாணங்களில் 7511 மெட்ரிக் தொன் நெல் இருப்பு மட்டுமே உள்ளது. அதன்படி, அன்றைய திகதி வரை மொத்த சேமிப்புத் திறனில் 2.3% மட்டுமே பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. சபையின் 136 ஊழியர்களுக்கு சம்பளமாக ரூபா 105,019,230 ஆன தொகையொன்று மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | நெல் சந்தைப்படுத்தல் சபையின் அனைத்து பலங்களையும் சுட்டிக்காட்டி, 2022/23 பெரும் போகம் மற்றும் 2023 சிறு போகங்களில் நெல் கொள்வனவு செய்வதற்கு 5 அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூன் 02 அம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்ற 60 நாட்களுக்குள் நிதிக்4ற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலம் 2020 ஆம் ஆண்டிற்கான கணக்கு 2023 எப்ரல் 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் தாமதக்காலம் 2 வருடங்கள் 2 மாதங்கள் ஆகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |